# What do I need to know if my child is suspended?

## Parent/carer information

# என் பிள்ளை இடைநீக்கம் செய்யப்பட்டால் நான் தெரிந்து கொள்ள வேண்டியவை என்ன?

## பெற்றோர்/பராமரிப்பாளர் தகவல்

### இடைநீக்கம் என்றால் என்ன?

இடைநீக்கம் என்பது ஒரு மாணவரை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பாடசாலைக்கு வர வேண்டாம் என்று பாடசாலை கேட்பதாகும் . மழலையர் பள்ளி முதல் ஆண்டு 2 வரை உள்ள மாணவர்கள் 5 பாடசாலை நாட்கள் வரை இடைநீக்கம் செய்யப்படலாம் மற்றும் ஆண்டு 3 - 12 மாணவர்கள் 10 பாடசாலை நாட்கள் வரை இடைநீக்கம் செய்யப்படலாம்.

மாணவர் ஒருவரின் நடத்தை குறித்த கவலை மற்றவர்களுக்கு அல்லது கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்தை ஏற்படுத்தும் போது அதிபர்கள் அந்த மாணவரை இடைநீக்கம் செய்யலாம்.

மாணவர்களின் நடத்தை/கள் குறித்த கவலையை வேறு வழிகளில் நிர்வகிக்க ஏற்கனவே முயற்சி செய்து மற்றும் நடத்தைக்கான ஆதரவுதவியைத் திட்டமிடவும் மற்றும் அந்த மாணவர் பாடசாலையில் இல்லாத நிலையில் அனைவரையும் எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என்பதைத் திட்டமிடவும் பாடசாலைக்கு நேரம் தேவைப்படும் போது அதிபர் அந்த மாணவரை இடைநீக்கம் செய்யலாம். இடைநீக்கம் செய்ய முடிவு செய்யும் போது அதிபர்கள் மாணவர்களின் நடத்தை மற்றும் தேவைகளை கட்டாயம் கருத்தில் கொள்ள வேண்டும். நடத்தை தீவிரமானதாகவோ அல்லது பாதுகாப்புப் பிரச்சினையாகவோ இருந்தால், உங்கள் பிள்ளை உடனடியாக இடைநீக்கம் செய்யப்படலாம்.

### என் பிள்ளை இடைநீக்கம் செய்யப்பட்டால் என்ன நடக்கும்?

பொருத்தமாயின், அதிபர் மாணவருக்கு வாய்மொழியில் சொல்வது அவசியம். அவர்கள் முடிந்தவரை உடனடியாக அல்லது 24 மணி நேரத்திற்குள் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்களுக்கு வாய்மொழியில் தெரிவிக்க வேண்டும். இடைநீக்கம் குறித்து பதிலளிக்க, பாடசாலையைச் சந்திக்க உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம்.

உங்கள் பிள்ளை இடைநீக்கம் செய்யப்பட்டதற்கான காரணங்கள், இடைநீக்கத்தின் விவரங்கள் மற்றும் காலக்கெடு ஆகியவை அடங்கிய இடைநீக்கம் குறித்த எழுத்துப்பூர்வ அறிவிப்பையும் அதிபர் உங்களுக்கு வழங்குவார்.

இடைநீக்கத்தின் போது உங்கள் பிள்ளை பாடசாலைக்கு வர அனுமதி இல்லை. இடைநீக்கத்தின் போது உங்கள் பிள்ளை தொடர்ந்து கற்பதில் பாடசாலை ஆதரவுதவி வழங்கும், மேலும் இதுப்பற்றி உங்களிடமும் உங்கள் பிள்ளையிடமும் பாடசாலை கேட்டறிந்து கொள்ளும். இடைநீக்கத்தின் போது உங்கள் பிள்ளையின் நல்வாழ்வை எவ்வாறு ஆதரிப்பது என்பது பற்றிய தகவல் கிடைக்கும் .

### இடைநீக்கத்தின் நீட்டிப்பு

ஆதரவுதவிகளைத் திட்டமிட போதுமான நேரத்தை இடைநீக்கம் வழங்கவில்லை என்றாலோ அல்லது இன்னும் நிர்வகிக்கப்படாத பாதுகாப்பு அபாயம் இருந்தாலோ , அதிபர் இடைநீக்கத்தை நீட்டிக்க முடியும். இடைநீக்கம் நீட்டிக்கப்பட்டால், அது முடிவதற்குள் பெற்றோர்கள்/ பராமரிப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

### இடைநீக்கம் குறித்து நான் மேல்முறையீடு செய்யலாமா?

ஆம், அதிபர் நியாயமற்ற முடிவை எடுத்துள்ளார் அல்லது கொள்கை மற்றும் நடைமுறைகளை சரியாகப் பின்பற்றவில்லை என்று நீங்கள் நம்பினால். மேல்முறையீட்டு வளங்களை பார்க்கவும்.

உங்கள் பிள்ளைக்காக வாதிடுதல் பற்றிய கூடுதல் தகவல்களும், மற்றும் பாடசாலையுடன் தொடர்புகொள்வதற்கான வழிகளை விளக்கும் பாடசாலை சமூக சாசனமும் உள்ளன.

### இடைநீக்கம் குறித்த தீர்மானக் கூட்டம் என்றால் என்ன?

இடைநிறுத்தம் முடிவடையும் தேதிக்கு முன்பு அல்லது அந்நாளில் உங்கள் பிள்ளை மீண்டும் பாடசாலைக்கு திரும்பலாம். உங்கள் பிள்ளையின் நடத்தையை நிர்வகிப்பதற்கும் தீர்வுகளை உருவாக்குவதற்கும் பாடசாலையுடன் உங்கள் நேர்மறையான ஈடுபாடு மிகவும் முக்கியமானது. உங்கள் பிள்ளை பாடசாலைக்கு திரும்புவதற்கு முன், உங்கள் பிள்ளையுடன் நெருக்கமாகப் பணிபுரியும் பாடசாலை ஊழியர்களுடன் ஒரு தீர்மானக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய பாடசாலை உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்.

நேர்மறையான கலந்துரையாடலுக்கு சிறந்த வாய்ப்பை வழங்கும் விதத்தில் சந்திப்பு நேரிலோ, தொலைபேசியிலோ அல்லது இணையம் வழியாகவோ இருக்கலாம். இந்த சந்திப்பு உங்கள் பிள்ளை பாடசாலைக்கு திரும்பும்போது அவர்களுக்கு ஆதரவுதவியாக நீங்கள் எவ்வாறு இணைந்து பணியாற்றலாம் என்பதை குறித்ததாகும். ஆதரவுதவி நபர் ஒருவரை பாடசாலையுடனான சந்திப்பிற்கு நீங்கள் உடன் அழைத்துவரலாம். உங்களுக்கு மற்றும்/அல்லது உங்கள் பிள்ளைக்கு நடைமுறை மற்றும்/அல்லது உணர்வுபூர்வமான ஆதரவுதவியை வழங்கக்கூடிய ஒரு ஆதரவுதவி நபராக அவர் இருக்கலாம்.

அதிக உத்திகள் மற்றும் ஆதரவுகள் தேவைப்படும் கவலைக்குரிய நடத்தைகளுக்கு, அவர்களுக்கு ஆதரவுதவி அளிப்பதற்கும் ஏதேனும் அபாயங்களைக் குறைப்பதற்கும் ஒரு திட்டத்தை உருவாக்க பாடசாலை உங்களுடனும் உங்கள் பிள்ளையுடனும் இணைந்து செயல்படும். உங்கள் பிள்ளைக்கான திட்டம் ஒன்று ஏற்கனவே இருக்கலாம். ஒரு திட்டம் ஏற்கனவே செயல்பாட்டில் இருந்தால், அது உங்கள் பிள்ளைக்கு உதவும் வகையில் சரிசெய்யப்படும். இந்தத் திட்டம் உங்களுடன் மற்றும் உங்கள் குழந்தைக்கு ஆதரவுதவியளிக்கும் பாடசாலையில் உள்ள மற்ற ஊழியர்களுடனும் பகிரப்படும்.

### நடத்தை மீண்டும் நடந்தால் என்ன செய்வது?

கவலைக்குரிய நடத்தை மீண்டும் நடந்தால், அதிபர் மற்றும் பாடசாலைக் கற்றல் ஆதரவுக் குழு உங்கள் பிள்ளையின் கற்றலை ஆதரிக்கும் வழிகளைக் கண்டறிய முயற்சிக்கும், அதில் மற்றொரு இடைநிறுத்தமும் அடங்கலாம். ஆதரவுதவியை வழங்க உதவுமாறு துறைக்குள் இருக்கும் நிபுணர்களைக் கேட்பது இதில் அடங்கலாம்.

### பாடசாலையிலிருந்து நான் என்ன தகவலைப் பெற முடியும்?

என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு நீங்கள் பாடசாலையை தொடர்புக்கொண்டு கேட்கலாம். எந்தவொரு முடிவுகளின் பின்னணியில் உள்ள காரணத்தையும், என்ன நடவடிக்கைகள் நடக்கும் மற்றும் உங்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை பாடசாலை உங்களுக்கு விளக்க வேண்டும்.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ள விரும்பி, ஆங்கில மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமறு தொலைபேசி இயக்குநரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.